## 2.12 2004–2005 – முதல் காலாண்டுத் தொகை ரூ. 48,17,50,000/– விடுவித்தல்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.110 நாள் : 12.07.2004

படிக்க :

1) அரசு ஆணை எண்.65, நிதி துறை நாள்.25.02.2004
2) அரசுக் குறிப்பாணை எண்.31354/2004/நிதி1–4/நாள்.20.04.2004
3) ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.ந.க.37718/2004/திஅ5, நாள்.03.05.2004

**ஆணை**

பார்வை 1 மற்றும் 2–இல் காணும் ஆணைகளின்படி 2004–2005ஆம் ஆண்டுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தமாக ரூ.10270.00 இலட்சங்களும், முதல் காலாண்டுக்கு ரூ.48,17,50,000/–ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. எனவே, 2004–2005 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகையில் முதல் காலாண்டுத் தொகையாக(25 விழுக்காடு) ரூ.48,17,50,000/–ஐ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்துச் செய்யும் பொருட்டு நிதி விடுவிக்குமாறு ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. கவனமான பரிசீலனைக்குப் பின் அரசு ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை ஏற்று, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2004–2005ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் முதல் தவணையாக (25 விழுக்காடு) ரூ.48,17,50,000/–(ரூபாய் நாற்பத்தி எட்டு கோடியே பதினேழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. இத்தொகையை மாவட்டம் வாரியாக இணைப்பில் உள்ளவாறு விடுவிப்பதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு இதன் மூலம் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3–ல் விடுவிக்கப்பட்டுள்ள தொகை கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

> “4515–00–ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு–800–ஏனைய செலவு–பத்தாவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–JF–சட்டடமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏனைய திட்டங்கள் நிறைவேற்றுதல்–16–பெரும் திட்டங்கள் (DPC 4515-00-800-JF-1602 )”

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.44117/ஊ.வ/04/ நாள்.09.07.2004ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்